சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 15.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 102/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | ஆனந்தகிருஷ்ணன் |
| தந்தை பெயர் | : | மனோகரன் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | சிறப்பு நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் |
| வயது | : | 45 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

2, 4, 6 எதிரிகள் ஆஜர். 1,3 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது தஞ்சாவூர் சிறப்பு நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளராக பணி புரிந்து

வருகிறேன். கடந்த 30.06.2011 ஆம் தேதி திருத்துறைப்பூண்டி காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது மாலை 16.30 மணியளவில் பணியிருந்தபோது சிங்களாந்தி மேலத்தெரு, மங்கலநாயகபுரத்தை சேர்ந்த முனுசாமி மகன் அ.சா-1 கார்த்திகேயன் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலில் அடிப்படையில் நான் மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா-1 கார்த்திகேயன் என்பவரை விசாரணை செய்து அவர் கூறியதை புகார் வாக்குமூலமாக பதிவு செய்து அந்த வாக்குமூலத்தில் அவரிடம் கையொப்பம் பெற்றேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ-1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து திருத்துறைப்பூண்டி நிலைய குற்ற எண். 655/2011-ல் இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2), 307 of IPC r/w 3(1)(ii) of SC/ST (PoA) Act, மற்றும் 25(1)(a) Indian Arms Act-கீழ் வழக்கு பதிவு செய்தேன். இந்த அச்சு முதல் தகவல் அறிக்கையை **அ.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கையினை திருத்துறைப்பூண்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கு துணை கண்காணிப்பாளரால் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதால் உரிய உயர் அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பி வைத்தேன். நிலைய கோப்பிற்கு வைத்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார். விவரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

தங்களிடம் தரப்பட்ட அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலத்தில் சுரேஷ், ஞானராஜ் மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோர் அ.சா-1-யை இரண்டு கைகளில் அடித்தார்கள் என்று கூறியவில்லை என்றால் சரிதான். PY02 y5314 என்ற எண்ணுள்ள காரில் வந்து அ.சா-1-யை தாக்கியுள்ளார் என்பதை கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலத்தை அது எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், அது எங்கு வைத்து பதிவு செய்யப்பட்டது என்பது அதில் குறிப்பிடப்பட்டவில்லை என்றால் திருத்துறைப்பூண்டி மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. நேரம்

குறிப்பிடவில்லை. இவ்வழக்கில் மருத்துவமனைக்கு சென்ற போது விபத்து பதிவேட்டினை நான் மருத்துவரிடமிருந்து பெற்று வந்தேனா என்றால் பெற்று வந்தேன். நான் விபத்து பதிவேட்டை பெறவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணையை உயர் அதிகாரியிடம் எத்தனை மணிக்கு ஒப்படைத்தேன் என்றால் நேரம் நியாபம் இல்லை. அன்றைய தினமே வழக்கு கோப்பை ஒப்படைத்துவிட்டேன். சம்பவம் மதியம் 3.30 மணியளவில் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலம் நான் தற்போது சொன்னது போல் சொன்ன தேதி, சொன்ன இடத்தில் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலம் கால தாமதமாக பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ-5 ஆன முதல் தகவல் அறிக்கையை நான் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். காவல் நிலையம் திருத்துறைப்பூண்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் தூரம் இருக்கும். 10 நிமிடத்தில் செல்லலாம்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.15 18:16:34 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.